(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 34 ]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, நவெம்பர் 04, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0097 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டு நவெம்பரில் மேதகு சனாதிபதி ஈரானுக்கு மேற்கொண்ட பயணத்திற்கான மொத்தச் செலவையும்,

(ii) உடன் சென்றவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) அதனால் நாடு பெற்றுக்கொண்ட நன்மைகளையும்,

(iv) அவை என்னவென்பதையும் மற்றும் அவற்றின் அளவையும்,

(v) இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட அளவையும்,

(vi) இன்னும் பெற்றுக்கொள்ளப்படவிருக்கின்ற எண்ணிக்கையை அதன் திகதி வாரியாகவும்,

(vii) அவ்வுதவிகள் எத்துறைகள் சார்ந்தவை என்பதையும்

அவர் இச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இதற்குப் பதிலாக, ஈரானுக்கு நாம் என்ன வழங்கினோம் என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0098 / '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ''அபி வெனுவென் அபி'' நிதியம் சட்டவாக்கம் செய்யப்பட்ட திகதியையும்,

(ii) அது சட்டவாக்கம் செய்யப்பட்ட திகதியிலிருந்து இற்றைவரை மாதாந்தம் சேகரிக்கப்பட்ட பணத்தின் அளவையும்,

(iii) 100,000 ரூபாவிற்கு மேல் நன்கொடை வழங்கிய ஆட்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) சேகரிக்கப்பட்ட பணம் எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதையும்,

(ii) படை ஆளணியினருக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யையும்,

(iii) எதிர்காலத் திட்டங்களையும் எதனை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0099 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மிஹின் எயார் ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை குத்தகைக்குப் பெறப்பட்ட, கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வாடகைக்குப் பெறப்பட்ட விமானங் களின் எண்ணிக்கையையும்,

(ii) செலுத்தப்படும் அல்லது செலுத்தப்பட்ட தொகையை மாதாந்த அடிப் படையிலும்,

(iii) நட்டம் ஏற்படாமல் செலவை ஈடுசெய்வதற்குத் தேவையான அதிகுறைந்த சரக்குகள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும்,

(iv) விமான சேவையின் ஆரம்பத்திலிருந்து செலவை ஈடுசெய்வதற்கு கொண்டு செல்லப்பட்ட சரக்குகள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும் மாதாந்த அடிப்படையிலும்,

(v) சரக்கு ஏற்றிச் செல்வதற்கான மொத்த இயலளவு, இற்றைவரை கொண்டு செல்லப்பட்ட மொத்த சரக்கின் கொள்ளளவு, மற்றும் ஆட்களின் எண்ணிக்கை ஆகியவற்றை மாதாந்த அடிப்படையிலும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) எரிபொருள், விமான சேவைகள், அலுவலக இடவசதி மற்றும் களஞ்சிய இடவசதி, வரிகள், விமான நிலுவைகள், வங்கிக் கடன்கள் மற்றும் ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த கடப்பாடுகள் ஆகியவற்றின் மொத்த நிலுவையை இன்றுள்ளவாறாக கால அளவுடனும்,

(ii) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மொத்தப் பணியாளர்களையும் எல்லா பணியாளர்களுக்கும் சம்பளத்துக்குப் புறம்பாக வழங்கப்படும் உரிமைகள் அடங்கலாக மாதமொன்றுக்குச் செலுத்தப்படும் மொத்தக் கொடுப்பனவு களையும் மாதாந்தம் 200,000 ரூபாவிற்கு சம்பளத்தைப் பெறும் எல்லா பணியாளர்களின் விபரங்களையும்,

(iii) உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும்கூட விமானப் பணியாளர்கள் குழு பராமரிப்புக் காப்புறுதிக்காக (ACMI) அவர்கள் செலுத்தும் மேலதிகச் செலவையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0170 / '08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க பந்தய சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்) சட்டத்தின் கீழ் நேரடியான தொலைக்காட்சி ஒளிபரப்பு வசதிகளை உபயோகித்து நடாத்தப்படுகின்ற பந்தயம் பிடிக்கும் தொழில் முயற்சிகள் இருக்கின்றதென்பதையும்,

(ii) இவ் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பாகவும் மூன்று இலட்சம் ரூபா வரி செலுத்த வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பந்தயம் பிடிக்கும் வர்த்தக நிலையங்களாக நேரடியான ஒளிபரப்பு வசதிகளை உபயோகிக்கும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை,

(ii) இந்நிறுவனங்களில் வரி செலுத்தும் கிளைகள் எத்தனை

என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அந்த நிறுவனத்தின் கீழ் உள்ள பெரும்பாலான கிளைகள் வரி செலுத்தவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) இதன் பிரகாரம் இந்நிறுவனங்களின் கீழ் வரி செலுத்தாத இடங்கள் எத்தனை,

(ii) அரசு இழந்துள்ள வருடாந்த வரித்தொகை எவ்வளவு,

(iii) வரி செலுத்தத் தவறுகின்ற இடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0171 / '08

5.

கௌரவ, லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— மத அலுவல்கள், ஒழுக்க மேம்பாடுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம், தெஹிவளை, அத்திடிய பாலத்திற்கு அண்மையில் அமைந்துள்ள காணியொன்றை பொது நம்பிக்கை பொறுப்பாளர் நிதியத்திற்கு வழங்கியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், இக்காணியின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்,

(ii) இது எப்போது வழங்கப்பட்டதென்பதையும்,

(iii) பொது நம்பிக்கை பொறுப்பாளர் நிதியத்தினால் மேற்படி காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு ஏதேனும் கொடுப்பனவு செய்யப் பட்டதா என்பதையும்,

(iv) ஆமெனில், எந்த விலையின் அடிப்படையில் வழங்கப்பட்டதென்பதையும்,

(v) காணி வழங்கப்பட்ட நிபந்தனைக்கமைய எவ்வாறான விடயங்களுக்கு இக்காணியைப் பயன்படுத்த முடியுமென்பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி காணி தற்போது தனியார் கம்பனியொன்றுக்கு விற்கப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) ஆமெனில், மேற்படிக் காணி என்ன விலைக்கு விற்கப்பட்டது என்பதையும்,

(ii) எந்த நிறுவனத்திற்கு என்பதையும்,

(iii) விற்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iv) விற்பதற்கு அனுமதி வழங்கியது யாரென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0565 / '08

6.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு லீற்றர் பெற்றோலை இறக்குமதி செய்கின்றபோது அரசாங்கம் அறவிடுகின்ற இறக்குமதி சுங்கத் தீர்வை எவ்வளவு,

(ii) பெற்றோல் லீற்றர் ஒன்றை நுகர்வோருக்கு வழங்குகின்ற போது அரசாங்கம் மேற்படி இறக்குமதி சுங்கத் தீர்வையுடன் அறவிடுகின்ற மொத்த வரி எவ்வளவு,

(iii) பெற்றோல் லீற்றர் ஒன்றுக்கு அரசாங்கம் அறவிடுகின்ற வரி, நுகர்வோரிடம் அறுவிடுகின்ற ஒரு லீற்றர் விலையின் பிரகாரம் என்ன வீதம்

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) நுகர்வோர் கொள்வனவு செய்கின்ற பண்டங்கள் சேவைகளின் விலை அதிகரிப்புடன் பெற்றோல் விலை அதிகரிப்புக்கு தொடர்புண்டு என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) பெற்றோல் ஒரு லீற்றருக்கு அரசாங்கம் அறவிடுகின்ற வரியைக் குறைத்தால் பண்டங்கள் சேவைகளின் விலையைக் குறைக்க முடியும் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0216 / '08

7.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கிராமியக் கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமியக் கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0218 / '08

8.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழில், நீரகவளமூலங்கள் (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0591 / '08

9.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசு பதவியேற்பதற்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் இருந்த

(i) வெளிநாட்டு மதுபான நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக் கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் தற்போதைய அரசு பதவியேற்ற பின்னர் தற்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள

(i) வெளிநாட்டு மதுபான நிலையங் களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) வெளிநாட்டு மதுபானங்களைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) அதன்படி தற்போதைய அரசு அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பவற்றை அவர் வெவ்வேறாக இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0410 / '08

10.

கௌரவ அச்சல ஜாகொடகே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையின் வலவை – எம்பிலிபிட்டிய எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டபோது 1982.01.01 ஆம் திகதியன்று ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமா யிருந்த அனைத்துச் சொத்துக்களும் யாவை,

(ii) இவற்றில் பொறுப்பேற்கப்பட்டதும், பொறுப்பேற்கப்படாததுமான அசையாச் சொத்துக்கள் மற்றும் வாகனங்கள் உள்ளடங்கிய சொத்துக்கள் யாவை,

(iii) இவற்றில் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையின் வீடுகள் / காணிகளின் எண்ணிக்கை யாது,

(iv) ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் அவை ஒப்படைக்கப்பட்ட அடிப்படை யாது,

(v) ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களில் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையின் வீடுகள்/காணிகளின் எண்ணிக்கை யாது,

(vi) ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையிலிருந்த எத்தனை ஊழியர் களுக்கு இவ்வாறு ஒப்படைக்கப்பட்டது,

(vii) ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையில் தற்போது எஞ்சியுள்ள வீடுகள் / காணிகளின் எண்ணிக்கை யாது,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 1982.01.01ஆம் திகதியிலிருந்து 2007.12.31ஆம் திகதி வரையிலான காலத்தினுள் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபைக்கு சொந்தமாயிருந்த (இன்றைய இலங்கை மகாவலி அதிகார சபை (வலவை)) வீடுகள் / காணிகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0547 / '08

11.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் ஆதார வைத்தியசாலையில் தற்போதுள்ள பெண்நோயியல், மகப்பேற்று சிகிச்சை நிபுணர்கள், விசேட பொது வைத்திய நிபுணர்கள் மற்றும் இருதய சிகிச்சை நிபுணர்கள் ஆகியோரின் எண்ணிக்கை யாதென் பதையும்,

(ii) ஆதார வைத்தியசாலையொன்றில் ஒவ்வொரு துறைக்கும் இருக்க வேண்டிய விசேட வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) குருநாகல் வைத்தியசாலையில் மூன்று விசேட வைத்திய நிபுணர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) குருநாகல் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு விசேட பொது வைத்திய நிபுணர் ஒருவரை நியமிப்பதன் மூலம் நோயாளிகள் வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெறுவதற்குப் பதிலாக சிகிச்சையைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) (i) அநுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், புத்தளம், மாத்தளை, கேகாலை போன்ற பல மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவு நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் மேற்படி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சு கொண்டுள்ள திட்டம் யாதென்பதையும்,

(ii) குருநாகல் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கு 2001-2004 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த அரசாங்கத்தினால் வகுக்கப்பட்ட திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0651 / '08

12.

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்ட எல்லையில் இரு பக்கத்திலும் அமைந்துள்ள "ஹல்மில்ல தெமட" ஒதுக்குப் பிரதேசத்திலுள்ள விசேடத்துவம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுற்றாடல் மற்றும் அமைவிடத்தின்படி இவ்வொதுக்குப் பிரதேசம் மிக முக்கியமான தென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) 1973.10.26 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 431A ஹொம்பாவ கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 153/ 154/ 155/ 156 ஆம் இலக்க காணித்துண்டுகளை சொந்தமாக்கிக் கொள்ளும் நோக்கில் பீ. டீ. காந்தி மீகொட என்பவர் பெறுமதி வாய்ந்த மரங்களை விற்று காட்டை அழிக்கின்றார் என்பதையும்,

(ii) இக்காரணத்தினால் அதிக பள்ளத்தாக்கான இடங்களில் மண்ணரிப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும்,

(iii) தீ வைத்தல் காரணமாக தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் நிலவுகைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும்,

(iv) ஒதுக்குப் பிரதேசத்தின் நீர் ஊற்றுக்களிலிருந்து அளவுக்கதிகமாக நீரைப் பெற்றுக்கொள்வதினால் சுற்றாடல் வரட்சி மற்றும் தும்மிய, இமிஹா மின்னேகம ஆகிய கிராமங்களுக்கு காட்டு யானைகளின் அச்சுறுத்தல் ஆகியவை ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0683 / '08

13.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறை முகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் மாதம்ப பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசன குளங்கள் எத்தனை மறுசீரமைக்கப்பட்டுள்ளன என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு குளத்திலும் மறுசீரமைக்கப்பட்ட இடம் மற்றும் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக யாவை,

(ii) உரிய ஒப்பந்த நடவடிக்கைகளைச் செய்த நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை,

(iii) இதுவரை பயிர்ச்செய்கை செய்வதற்கு நீரைப் பெற முடியாது கைவிடப்பட்ட குளங்கள் எத்தனை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இக்குளங்களை மீண்டும் உரிய நிலைக்கு மாற்றுவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0684 / '08

14.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறை முகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் எத்தனை மறுசீரமைக்கப்பட்டுள்ளன என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு குளத்திலும் மறுசீரமைக்கப்பட்ட இடம் மற்றும் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக யாவை,

(ii) உரிய ஒப்பந்த நடவடிக்கைகளைச் செய்த நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை,

(iii) இதுவரை பயிர்ச்செய்கை செய்வதற்கு நீரைப் பெற முடியாது கைவிடப்பட்ட குளங்கள் எத்தனை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இக்குளங்களை மீண்டும் உரிய நிலைக்கு மாற்றுவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0685 / '08

15.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறை முகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் பல்லம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் எத்தனை மறுசீரமைக்கப்பட்டுள்ளன என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு குளத்திலும் மறுசீரமைக்கப்பட்ட இடம் மற்றும் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக யாவை,

(ii) உரிய ஒப்பந்த நடவடிக்கைகளைச் செய்த நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பெயர், முகவரி ஆகியவை யாவை,

(iii) இதுவரை பயிர்ச்செய்கை செய்வதற்கு நீரைப் பெற முடியாது கைவிடப்பட்ட குளங்கள் எத்தனை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இக்குளங்களை மீண்டும் உரிய நிலைக்கு மாற்றுவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.1),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.2),— ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) இன் அலுவல்கள் 70 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்படி "இருபத்தி ஆறு" என்பதற்குப் பதிலாக "இருபத்தி மூன்று" என இடுவதன் மூலம் செயற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2008 நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 1.00 மணிவரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2008 நவெம்பர் மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப் படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் 30 ஆந் திகதிய 1547/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஓகத்து 26 ஆந் திகதிய 1564/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவர்,— நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடனும் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் வாடிக்கையாளர் ஒருவரின் வேண்டுகோள்களின்பேரில் இலத்திரனியல் நிதிக் கைமாற்றுதல் ஒவ்வொன்றையும் நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடப்பட வேண்டிய நிதித் தொகையின் குறைந்த எல்லை விதிக்கப்பட்டு சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஜூன் 25 ஆந் திகதிய 1555/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — இரண்டாம் மதிப்பீடு.

*6.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*10.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*11.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*17.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*20.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு" — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **II** இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **III** இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **IV** இல் குறித்துரைக்கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.பெறப்

(அமைச்சரவையின் அங்கீகாரம் பட்டுள்ளது.)

*22.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*24.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,- அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515-12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் ரூ. 58,915 சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து ரூ. 58,915 மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

33.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.